சென்னைவெல்லளகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 13.] MADRAS:—SUNDAY MARCH, 27, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.


| | |
|---|---|
| நாணமற்றசெய்கை. | சங்கம். |
| பாலர்முன்பகடிகள். | நாமதாரணம். |
| தத்துவப்பிரமாணம். | ஹிந்துஉடுப்புவிரோதக்கூட்டம். |
| கண்ணீகள். | வர்த்தமானசங்கிரகம். |


தெரிந்துகொள்ளாமலும், தெரிந்துகொள்ள முயற்சிசெய்யாமலும், பூர்த்தியாய் தெரிந்துகொண்டவர்களைப்போல நடிப்பவர்கள் எப்போதும் மூடர்களாகவேயிருப்பார்கள்.

பொன் நெருப்பினால் சோதிக்கப்படுகிறது, சிநேகிதன் ஆபத்துகாலத்தில் சோதிக்கப்படுகிறான்.

ஒருவனுடைய குற்றத்தைப்பாராயாதே; உன்னுடையகுற்றத்தைப் பொறுமையோடு ஆராய்ந்துபார்.

துன்பத்திற்கு நல்ல அவிழ்தம் அதை மறந்துவிடுவதே.

---

## நாணமற்றசெய்கை.

—o—

பயிரங்கத்தில் நாணமற்ற செய்கை செய்யலாகாதென்பதும் நாணமற்ற சொற்கள் பேசலாகாதென்பதும் இக்காலத்து யாவராலும் ஒப்புக்கொள்ளப்படத் தக்கவையே; ஆயினும், வைத்திய சாஸ்திரத்தில் அப்படிப்பட்ட சில சங்கதிகள் விதியில்லாமல் எழுதவேண்டியிருக்கின்றன. பட்சிகளில் காகமுதலிய சிலவற்றின் புணர்ச்சியைக் காண்பதரிது; மிருகங்களில் பூனை முதலிய சிலவற்றின் புணர்ச்சியுமப்படியே. ஆனால் ஊர்க்குருவி முதலிய சில பறவைகளும் ஆடுமாடு குதிரை நாய் முதலிய சில மிருகங்களும் கண்டவிடத்தில் நினைத்தபோது புணர்வதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணமென்னை? ஆஸ்திகர்கள ஞானபூரணரொன்று கூறும் கடவுளினது சித்தம் அப்படியிருக்கிறதாக்கும்! அவ்விதச் செய்கையில் அப்படிப்பட்டமிருகாதிகளை தார்மார்க்கவழிப்போக்கர்களும் சிறுவர்களும் நின்று பார்த்துககொண்டு களிப்படைகிறார்களே; இதை அக்கடவுள் கண்ணுறுதிருக்கின்றனரோ! உண்மையாய் அப்படிப்பட்ட கடவுளொருவரிருப்பாராகில், அவர் நாணமுற்ற மிருகஜாதிகளுக்கு உணர்வு ஊட்டியதுபோல நாணமற்ற மிருகஜாதிகளுக்கும் ஊட்டியிருக்கலாமே; அப்படிப்பட்ட ஸ்தலங்களை வஸ்திரமுதலியவற்றால் மூடிக்கொள்ள அதற்கு வேண்டிய செடிசெட்டுமுதலிய வஸ்துகளையும் அவற்றை உபயோகித்துக்கொள்ள அறிவையும் மானிடர்களுக்கு ஈந்தருளியதுபோல மிருகங்களுக்குத் தாம் கொடாதிருப்பதை இப்போதாவது அவர் தெரிந்துகொண்டிருப்பதால், மானிடர்களுடைய திருஷ்டிக்குத் தென்படாதபடி மிருகங்களுக்குரிய அந்தஸ்தலங்கள் தோலினால் மறைந்திருக்கத்தக்கதாக இனியாவது சிருஷ்டி செய்யலாகாதா? கடவுளினுடைய திருவருளை நாம் கண்டறியக்கூடாமை, அவருக்குச் சித்தமுண்டானால் அப்படியே செய்வாரென்று மதுரமான வார்த்தைகள் சொல்வார்கள் போலும். இதனாலே, ஆதியில் மனித உற்பத்தியுண்டானபோது, மானிடர்கள் மிருகங்களைப்போலவே நிர்வாணிகளாயிருந்தார்களென்றும், நாள் செல்லச்செல்ல நாணமென்பதுதோன்ற, இலை, தழை, புல் தோல்முதலியவற்றால் மூடிக்கொண்டார்களென்றும், அறிவு விளங்க விளங்க, அந்தந்த தேசத்தில் கிடைக்கும் பொருள்களுக்கேற்ற முரட்டு உடைகள் செய்துகொண்டார்களென்றும், நாகரீகம் வளரவளர, அவற்றை நாணயமாகச் செய்து சிரேஷ்டபடுத்திக்கொண்டு வருகிறார்களென்றும் தெரிந்து தெளியலாமே.

சிலவிஷ்ணுவாலயங்களிலே கடவுளர்கள் மலோபாதை செய்தபாவனையாக, பிராமணர்கள் விக்கிரகங்களுக்குக்குதமிருப்பதுபோல எண்ணிக்கொண்டு அவ்விடத்திலே சந்தன உருண்டையை மலம்போலத் திரியாகப்பிழிந்து அப்புறமெடுத்துவிடுகிறார்கள். ஸ்திரீவிக்கிரகங்களுக்கும் இவ்வாறுதானே. இந்த மூடச் செய்கையை நாணமற்ற செய்கையென்று சொன்னாலுஞ் சொல்லலாமே.

---

## பாலர் முன் பகடிகள்.

---

குட்டுதற்கோ பிள்ளைபாண் டியனிங்கில்லை
    குறும்பியள வாக்காதைக் குடைந்துதோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை
    இரண்டொன்றாய் முடிந்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
    விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைகளுண்டு
    தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே.

என்று கூறியபடிக் காசுத் தம்பிரான் உரைக்கிணங்கச் சில பத்திரிகாசிரியர்கள் தற்காலம் ஏற்பட்டுத் தற்கால கல்விமான்கள் பெரும்பாலும் மேனிகுலைந்து வைதவ்வியமடைந்த பாஷைகளிற் பயின்றிராது அரச பாஷையையே தேடிக் கற்றன்னாராதலாலும், அங்ஙனங் கற்றவர்களால் அசட்டை செய்யப்பட்ட பாஷைகளிற் பிரசுரமாகிவரும் பத்திரிகைகளையும், அவற்றிற்கு ஆசிரியத்தன்மைபூண்டொழுகும் பத்திரிகாசிரியர்களையும் பொருட்படுத்தாதிருக்கின்றமையாலும், அப்பத்திரிகைகளிற்பிரசரித்துவரும் டம்பவாசகங்களையும் தற்புகழ்ச்சியையும் அநியாய விருத்தங்களையும் கண்டு கண்டிக்கின்றிலர். ஆனால் மேற்சொன்ன அவ்வைதவ்விய பாஷையிற் பயின்றோர்தாமும் ஏன் கண்டிக்கின்றிலரெனின், அவர்களுக்கு வேறு பாஷா சாஸ்திரங்களோடு தங்கள் சுபாஷையிலுள்ள சாஸ்திரங்களை ஒப்பிடவும் அங்ஙனம் ஒப்பிட்டு விசேஷா விசேஷங்களைக் காணவுந்தேறிபோதாமையால், "பொரிமாவை மெச்சும் பொக்கைவாய்க் கிழவிபோலும்" "எறும்பின் கண்ணிற்கு எருமை மூத்திரம் ஏகப்பெருவெளி யென்பதுபோலும்" பாஷா பயிற்சியில்பாமராயப் பாலர்போல்வாரைப்பகட்டித் தற்புகழ்ச்சி செய்துகொண்டுஜீவிக்கின்றார்கள். இவர்கள் சொற்சாலத்தின் ஆபாசத்தையுணருஞ் சத்தியற்ற பேதைச்சனங்கள் இவர் இவ்வளவு பட்டபடப்பாய் மூச்சுவிடாமல் வாயில் ஈ நுழையாமல் பேசுகின்றாரே, இவர்தான் உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிக்கவல்லார், இவரையொப்பார் யார் இருக்கின்றார்கள், இவர் ஓர் அவதாரமாக்கும் என்று மெச்சிப்புசழ்ந்து மேன்மை பாராட்டுகின்றார்கள். இங்ஙனம் வஞ்சிக்கப்பட்ட ஏழைமதிகளை நோக்கி யாரேனும் சிறிது நியாயங்கூறி மறுப்பின், இது கலிகாலம் என்றும், கலியின் கொடுமையென்றும் தங்களுக்குள்ளேதாமே பரிகாரம் செய்துகொண்டு திருப்தியடைகின்றார்கள். காலத்தின்மேலே கொடுமையை ஏற்றுகின்ற இவர்கள் புத்தியே புத்தி! கலியுகத்தில்தானா நடக்கத்தகாதனவாய அக்கிரமங்களெல்லாம் நிலைபெற்றுவருகின்றன!

---

## தத்துவப்பிரமாணங்கள்

---

அடியில்வரும் நான்கு பிரமாணங்களை மனதில் நன்றாய்ப் பதிந்துகொண்டு அப்பிரமாணங்களுக்கேற்ற உதாரணங்களையும் தெரிந்துகொண்டால், உலகத்தில் தோற்றமாகிற ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் இன்னதென்று சொல்லலாம்: எவ்வாறெனின், கல் மணல் உருண்டுபோகாமல் இருக்க ஜலம் உருண்டுபோகவேண்டியதென்னவென்று கேட்கின், ஆத்திகர் மணலை உருண்டுபோகாதபடியும் நீரை உருண்டுபோகும்படியும் கடவுள் விதித்தாரென மொழிகின்றனர். தத்துவத்தை யேற்றபடி ஆராய்ந்த நிறைமொழிமாக்தரோ இன்னின்ன காரணத்தினாலே உருண்டுசெல்லுகிறதென்று புகருவரேயன்றி ஆத்திகர்களைப்போல் சொல்லார்கள். ஆகையால், அந்தந்தக்காரியத்தின் சத்துவின்போக்கு எப்படியோ அப்படியே

அதுஅது செல்லும்; அவற்றைத் தெரிந்துகொள்வதற்குமுன்னே தத்தவப்பிரமாணங்களைத் தெரிந்துகொள்வது ஆவசியமாகும்.

உலகத்தில் நம்முடைய கண்ணுக்குத் தோற்றுகிற வனைத்தும் 4 பிரதானபிரமாணங்களினாலே விளங்கும். எவையெனில், அணு, கவர்ச்சி, தள்ளுதல, தன்நிலைமை காத்தல் ஆகிய நான்கே. இவைகளைத் தத்தவப்பிரமாணங்களென்பார்கள். இந்நான்கும் பூலோகத்தில் தோற்றுகிற எவ்வித அரிதான பொருள்களையும் அறிந்து வகுக்கிறதற்கு அநுகூலப்படுகின்றன. இவற்றுள்—

1. அணு (Atom) சடப்பொருளாயிருக்கிற யாவும்மிகுந்த நுட்பமும், அழியாமையுமுள்ள மாறுப பங்குகளாக வகுக்கப்படும். அப்படிப்பட்டபங்குகளுக்கு அணுக்களென்றுசொல்லப்படும். உதாரணம்—ஒரு தங்கத்துண்டையெடுத்து, அதைராவினாலும், அறுத்தாலும், கரையச்செய்தாலும், அதைஎத்தனைபங்காக்கிக்கொண்டாலும், அதன்ரூபம் மாறினாலும், அதிலுள்ள ஜடமாகியதங்கம் மாறாமல், பின்னும் அது தங்கமாகவே இருக்கும். பிரிக்கப்பட்ட அந்த அணுக்களைச்சேர்த்தால், அது முன்போல ஒருதுண்டு தங்கமாகவே யிருக்கும்.இப்படிச்சடபொருளை அநேகநுட்பமான பிரிவுகளாய்ப் பிரிக்க அந்த நுட்பமான பிரிவுகள் இனிப் பிரிக்கக்கூடாதபடிக்கு நிற்கின்ற அந்தமாகிய பகுதியே அணுஎன்று சொல்லப்படும்.

2. கவர்ச்சி (Attraction) மேற்சொல்லிய அணுக்கள் தனியேயிருந்தாலும், சேர்க்கையாயிருந்தாலும், மற்றெல்லாத் தனி அணுக்களோடும் சேர்க்கையோடும் சேர்ந்துகொள்ளும் தன்மையுள்ளதாம். உ-ம்.—கட்டியாயிருக்கிற எந்தப் பொருளினுடைய அணுக்களும் ஒன்றோடொன்று பற்றுதலாயிருக்கிறதும், பூமியில் இருக்கிற ஒரு கற்பாளம் பூமியோடு ஒட்டுகிற சேர்க்கையால் கனத்திருக்கிறதும், சமுத்திரத்திலுள்ள ஏற்றமாகிய அலை சந்திரனைநோக்கி எழும்புகிறதும், ஆகிய இவ்வகையுள்ளதெல்லாம் பாசமென்றும், கவர்ச்சியென்றும் சொல்லப்படும். பொருளகளுடைய அணுக்கள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற பாசத்தைப் **பற்றுக்கவர்ச்சி** என்றும், பூமியின்மேல் பாரமாக ஒட்டிய பொருளினுடைய பாசத்தையும், கடலினுடைய அலை சந்திரனைநோக்கி எழும்புகிற பாசத்தையும் **திண்மைக்கவர்ச்சி** என்றும் இழுப்புக்கவர்ச்சி என்றும் சொல்லலாகும்.

3. தள்ளுதல் (Repulsion) சேர்க்கையாயிருக்கிற அணுக்களுக்குள்ளே உஷ்ணத்தை ஊட்டினால், முன்னுள்ள பற்றுக்கவர்ச்சி தளர்ந்துபோக, அந்த அணுக்கள் ஒன்றுக்கொன்று விலகவும், அல்லது ஒன்று மற்றொன்றைத் தள்ளவுந் தக்கதன்மையுள்ளதாம். உ-ம்.—நீர்க்கட்டிக்கு உஷ்ணத்தை யேற்றினால், அதுதண்ணீராயிளகிப்போம், தண்ணீருக்கு உஷ்ணத்தை யேற்றினால, அதன்அணுக்கள் ஆவியாகப் பிரிந்துபோய்விடும். வெடிமருந்துக்கு தீயைக் காண்பித்தவுடனே அது ஆவியாக விரிந்து சப்தமாய்வெடிக்கிறது. இவ்வுதாரணங்கள் அணுக்களுடைய தள்ளுதலின் பிரமாணத்தைக்காண்பிக்கின்றன.

4. தன்னிலைமைகாத்தல் (Inertia) உலகத்தில் அசையாதிருக்கிற பொருள் என்றைக்கும் அசையாமலும், அசைந்துகொண்டிருக்கிறபொருள் என்றைக்கும் அசைந்துகொண்டுமிருக்குந்தன்மையுள்ளதாம். உ-ம்.—குயவன் தன சக்கரத்தை சுற்றாமல் சும்மாயிருக்கிறபோது அது அசைவின்றி சும்மாயிருக்கும். அதற்குப் பலவந்தமாய் விசைகொடுக்கும்போது விரைவாய்ச்சுற்றும். அது விரைவாய்ச் சுற்றுகிறதற்குத் தக்கதாய் அதை நிறுத்துகிறது வருத்தம். அப்படியே உலகத்திலுள்ள எல்லாப் பொருளகளுக்கும் ஒருவகையான இணங்காமை யுண்டு. சும்மாயிருக்கிற பொருளகள் சும்மாயும், அசைந்துகொண்டிருக்கிறவைகள் அசைந்துகொண்டு மிருக்கும். அசையாதவைகளை அசைவிக்கவும், அசைகிறவைகளை அசையாதிருக்கச் செய்யவும் யேதாவது சத்துவேண்டும். குயவனுடைய சக்கரம் சும்மாயிருக்கையில் அது சுற்றும்படியாய் குயவன்கையால் விசை கொடுக்கிறதைக் காண்கிறோம். ஆனாலுங் கொஞ்சநேரத்திற்குள்ளாக அது மற்ற எதுவினாலே தடுக்கப்படாமலிருக்க, வரவரத் தானாய் நின்றுகொள்ளுகிறதைக் காண்கிறோமேயென்று ஆட்சேபித்தால், அது தடையில்லாமல் தானாய் நின்றுகொள்ளுகிறதென்று சொல்வது தப்பிதம். அதற்கு இரண்டுவகையான தடைகளுண்டு. க. ஆகாயத்திலுண்டாகிய தடையும், உ. சக்கரம் ஆடுகிற அச்சுத்தேய்வினாலுண்டாகிய தடையுமுண்டென்று அறிக.

M. M.

---

## கண்ணிகள்.

ஞானகண்ணியிவை செப்புதற்கியாவனாயான்
போனகாப்பாகப் பெற்றுனைப்பேன்பேசேடா. (1)
நயமானவாத்திகர்கள் நவிலுமந்தவஸ்துவையே
சுயஞானியானொருவன் சொல்லுமிதைக்கேளேடா. (2)
உனக்குள்ளேநானிருப்ப துண்மையெனினிந்தபெரு
மனசசலேயேதுக்கென வழக்காடிவருவேண்டா. (3)
எனக்குள்ளேநீயிருக்கி னெம்பிரானென்பதுமார்
பினைத்தலிதுவெனவே பின்னும்வழக்காடுவண்டா. (4)
உன்னாலேயான்பிழைத்தா லுனக்கேகவலையன்றி
என்னாலேயேதுமுண்டோ வென்றுவந்துநிற்பனடா. (5)
என்னாலேயேதுமின்றே லெனக்குசகவலையுண்டோ
உன்னாலேவந்ததெனறே யுனக்குமிதுவுண்மையடா. (6)
செயலெல்லாமுன்னதெனின் செயல்தானெனக்குமுண்டோ
செயல்தானிருப்பதினாற் செயலிதுவுமாருக்கடா. (7)
நானியற்றுஞ்செயலெல்லாம் நாதனீயுன்னதென்றால்
ஏனிந்த துன்பமெனக் கேதுக்கிருப்பதடா. (8)
எல்லாமுன்செயலென்னி னென்செயலு முன்செயலே
அல்லாம லென்செயலு மார்செயலோசொல்லேடா. (9)
அணுவுநின்செயலன்றி யசையாதெனவுரைத்தால்
அணுவுமிடந்தரா தனிவழக்காய்வருவேண்டா. (10)
வழக்காடவேண்டாமுன் வாதனைகளத்தனையும்
கிழக்கதையென்றேமுடித்துக்கிட்டேநெருங்குவண்டா. (11)
வாதமிடுகின்றவிந்த வழக்கெல்லாமுன்செயலே
நாதனீயில்லையென்றால் நான்விடுக்கமாட்டேண்டா. (12)
ஆண்டவனென்றேனு மதட்டியுரைக்கின்தோ
தாண்டவமிட்டோடிவந்து தடுத்துவழக்காடுவண்டா. (13)
கடவுளெனல்கண்டசொல்லோ காதினாற்கேட்டசொல்லோ
திடமாயுரைத்திடென திட்டிவழக்காடுவண்டா. (14)
காணுமற் கேட்டசொல்லைக் காரணமாய்க்கொண்டேதான்
வீணவாதமிடல் விதியோவென்றுரைப்பனடா. (15)
வாய்ஞானம்பேசுவதால் வருமோசுகப்பேறு
நாய்போற்குலைப்பதென்ன ஞானமென்றுசொல்வேண்டா. (16)
வெறும்பேச்சைக்கற்றுசிலர் வேதாந்தமென்றுசொல்லி
குறும்பாகப்பேசுவதாற் குணமுண்டோவென்பேண்டா. (17)
வாய்வாதக்கள்ளரவர் வாதனைகளத்தனையும்
பேய்க்கூரலென்றேயெதிர்த்துப் பேசியே நிற்பேண்டா. (18)
மெச்சியேயவர்பேச்சின் மேட்டிமையைக்கண்டவர்க்கு
எச்சிற்கலையிடுவா ரெவரென்றேநகைப்பனடா. (19)
கய்தவங்கள்கொண்டேயவர் கடைத்தேறலாமெனவே
செய்தவங்களில்லாச்செயலைநானறிவேண்டா. (20)
சர்வமுமவன்படைப்பாய்ச் சகத்தோர்கள்கூறுகின்றார்
சர்வமுமவனதென்றால் சம்மதிக்கமாட்டேண்டா. (21)
சர்வமுமவனதென்று சாற்றுவரேலையையோ
கர்மமெனக்குமுண்டோ காட்டுமென்றுநிற்பனடா. (22)
அவன்படைப்பேயனைத்து மென்றாலோவப்போது
இவனுமவன்படைப்பா யியம்புவேன்பாரேடா. (23)
நானுமவன்படைப்பாய் நாட்டுமந்தநியாயத்தால்,
நானுமவன்சொற்செயற்கு நடுங்கிநிற்கவேண்டுமடா (24)
வேண்டாதவன்பேச்சை வெட்டியேபேசிநிற்கும்
ஆண்டானிலையையா ளடைந்ததுவுமென்னேடா. (25)
நானவன்படைப்பாயின் நானவனடிமையன்றோ
நானடிமையல்லவென்றே நாட்டியேநிற்பனேடா. (26)
என்னையவன்படைக்க ஏவினதாரையையோ
என்னையவன்படைப்பென்னி னெவ்விதமாய்நம்புவண்டா. (27)
நம்பும்படிசெய்தலன்றோ நல்லோர்கட்கழகன்றி
வம்பிடுவதாரெனவே வழக்காடிநிற்பனடா. (28)
என்னையவனேன்படைத்தா னெங்கேயிருந்தெனிலோ
பின்னையவர்விடைகள் பிதற்றலேயென்பேண்டா. (29)
என்னைப்படைத்தவ னென்றந்தையல்லாமல்
என்னைப்படைக்கவவ னெவனென்றேகேட்பனடா. (30)

கிருஷ்ணகிரி உண்மைவிரும்பி.

(இன்னும் வரும்.)

---

## சங்கம்.

உலகத்தில் சகல விவகாரங்களும் சேர்க்கையாலேயே பிரகாசமடைகின்றனவென்பது நிர்விவாதமான **விஷயம்.** சேர்க்கை யென்பது உலகத் தில்லாவிடின் உலக விவகாரம் அதற்குமுன்னரே இல்லையாய்விடும். நாம் நமது எண்ணத்தைப் பிறர்க்குத் தெரிவிக்கவல்ல சக்தியைப்பெற்றதும், பிறர் எண்ணங்களை நாம் உணரும்படியான கியானத்தையுற்றதும், சேர்க்கையின் வல்லபத்தாலல்லாமல் வேறுவல்லபத்தாலன்று. நாம் ஒரு கருமத்தை முற்றுவிக்கும்படி மனுபிலாஷங்கொள்ளின், அக்கொள்கை ஈடேறுவதற்கு நமது கை கால்முதலிய உறுப்புகளும், கண் மூக்குமுதலிய விந்திரியங்களும், இவற்றிற்குத் தத்துவத்தையுண்டாக்கவல்ல உணவாதிகளும், இவற்றை மனம் செலுத்தும்வழியிற் செலுத்தப்பழக்கமும் ஆகிய சகல சேர்க்கை விசேஷத்துவங்களும் இன்றியமையாது வே

ண்டற்பாலனவாயிருக்கின்றன. ஒருவன் உலகத்தில் சீவிக்க வேண்டில் அவன் மனத்தோடு கருவிகரணாதி உறுப்புகள் உடனொத்து இயங்கவேண்டியது ஆவசியகமாகவிருக்கின்றது. ஒருவன் இச்சித்த தனஜீவாக்ஷணார்த்தம் (தேகவருத்தத்தைப் பாராட்டாதபடி) அவனது கண்ணினுடைய உதவியால் கால் செல்லவேண்டிய விடத்திற்குச் சென்று, கை செய்யவேண்டிய கருமங்களைச் செய்து, வாய்பேசவேண்டிய விஷயங்களைப் பேசிப் பெறவேண்டிய ஊதியத்தைப்பெற்று, பண்டமாற்றஞ் செய்து, குக்ஷிக்கிட்டு, ஜீவரக்ஷணையடைந்தால் சுகமுறுவது அவன் தேகமுழுதுமேயன்றோ? அதுபோல, மானுஷீகமென்னும் தேகத்திற்கு உறுப்புகள்போலுமுள்ள நாம் ஒவ்வொருவரும் உடனொத்து மனமொழிமெய்களிணங்கச் செய்யவேண்டிய சுகஹேதுவாகிய கருமங்களைச் செய்தாலன்றோ மானுஷீகப் பொதுநலம் மலிவடையும்? மானுஷீகப பொதுநலம் மலிவெய்தினாலல்லாமல், நாம் ஒவ்வொருவரும் தனித்தனி சுகமுறுதல் கூடாதே; எங்ஙனமெனின் வயிற்றோடு வைராக்கியங்கொண்டு, கைகால்முதலிய உறுப்புகள் தத்தம்மாலாகிய தொழில்களைச்செய்து குக்ஷிக்கிட்டு இரக்ஷிக்காவிடின், கைகால்கள் வலுவிழந்து, தேகமுந் தொழிலிழந்து, சித்தமுஞ் செயலழிந்து முற்றும் நாசமாயழிந்துவிடுவது பிரத்தியக்ஷமன்றோ? தேகத்தினது உறுப்புகளாகிய கருவிகரணங்கள் ஒத்து இயங்காவிடின், தேகமுற்றும் நாசமடைவதுபோல், மானுஷீக உறுப்புகளாகிய நாம் ஒவ்வொருவரும் ஒத்து ஒருங்கமைந்து இயங்காவிடின், மானுஷீகமே முழுதும் நாசமடையுமென்பதற்கு வேறு தாட்டாந்தமும் வேண்டற்பாலதோ? ஆதலால் காம்தாம் சுகமடையவேண்டுமென்னும் சித்தத்தையுடைய ஒவ்வொருவரும் மானுஷீகத்தையும் மானுஷீக சுகத்தையும் மலிவிக்க ஒருங்கு சேரவேண்டியது ஆவசியகத்தில் அதியாவசியகமும், பிரதமத்திற் பிரதமமும், பிரதானத்தில் அதிபிரதானமுமான காரியம். சம்பந்த நியாய அளவில் நின்று பேசுங்கால், ஒருவரால் தனியே ஆகத்தக்க காரியம் ஒன்றுமேயில்லை, பலர் சேர்ந்தபோது ஆகாதகாரியமும் ஒன்றுமேயில்லை! ஆதலால் சுகவிர்த்தியை விரும்பும் அதிவிவேகமும் பெருந்தகையுமுடைய நண்பர் சகலருஞ் சேர்ந்து ஓர் சங்கமாவது அதியாவசியகம். "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" நம்மவருள் ஒற்றுமை இல்லாமலே அநேகர் கியானசிரஞ்சீவிகளாகவே இருக்கின்றார்கள். ஐரோப்பியர்முதலிய தேசத்தார்கள் ஒற்றுமையினாலேயே நாளுக்குநாள் வளர்பிறைபோல கியானவிர்த்தியடைகின்றார்கள். இதுவே நம்மனைவருக்கும் அனுபவதாட்டாந்தமாகும்.

## நாமதாரணம்.

உலகத்திலுள்ள மானிடர்களிற் சுவஞானமில்லாதவர்களாலேற்படுத்தப்பட்ட மதங்களை யனுசரிக்கின்றவர்களில் நாமதாரிகளென்னும் பெயருடையோர் பூமியிலே விளையு மோர் வகைப் பசையுள்ள * வெண் மண் விளைவுற்றிருக்குமிடஞ் சென்று, இந்திரதிக்கையாயினும் குபேரதிக்கையாயினும் நோக்கி நின்று நாராயண நமவென்னும் மந்திரத்தை நாவினால் நூற்றெட்டுதரஞ் சொல்லி சலத்தை அம்மண்ணின்மேல் புரோக்ஷித்து அம்மண்ணை மண்வெட்டியினாலாயினுங் கைக்கோலினாலாயினுங் கெல்லி வேண்டியமட்டுங் கூடைகளில் நிறைத்துத் தங்கள் கிரகங்களுக்குக் கொண்டுபோய் இடித்துத் அரித்து அம்மண்ணினுள்ளே பச்சரிசிக் கஞ்சியையாயினும் பசைகளோடு கலந்த நீரையாயினும்விட்டுப்பிசைந்துருட்டி ஒவ்வோரங்குலப் பிரமாணமாகவும்நாற்சதுரமாகவுஞ்செய்து சூரியகிரணத்திலே காயவைத்து அம்மண்ணுங்கட்டிக்கு நாமக்கட்டியென்றுபெயரைக் கற்பித்து, அம்மண்ணுங்கட்டியையும் அம்மண்ணுங்கட்டியங்குலப்பிரமாணமோர் தென்னீர்க்கையும் பட்டினாற் செய்யப்பட்ட பைகளிலேனும் ஓலைகளினாற் செய்யப்பட்ட சிறுபெட்டிகளிலேனும் பத்திரப்படுத்தி காலைமாலைகடோறும் கை கால் முதலிய அவையவங்களைச் சுத்திசெய்து, கிழக்குமுகமாயினும் வடக்குமுகமாயினும், இருள் இடி முதலிய உற்பாத நேரங்களினும் பிறவூர்க்குச் சென்றபொழுது திக்குத் தெரியாத காலங்களினுமெம்முகமாயினு மிருந்து சலபாத்திரத்திலுள்ள சலத்தை உத்தரணியென்னுஞ் சிறு கரண்டியினா லுழுந்தப்பிரமாண நீரை வலவுள்ளங்கையில் விட்டுக் கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த என்னு மந்திரங்களைச் சொல்லி மூன்றுதரமாசமித்து விஷ்ணு, மதுசூதன, திரிவிக்கிரம, வாமன, ஸ்ரீதர, ஹிருஷீகேச, பத்மநாப, தாமோதர, சங்கர்ஷண, வாசுதேவ, பிரத்தியும்ன, அனிருத்த, புருஷோத்தம, அதோக்ஷஜ, நாரசிம்ம, அச்சுத, ஜநார்த்தன, உபேந்திர, ஹரேஸ்ரீகிருஷ்ணாயநம, என்னும்விஷ்ணுவினுடைய பெயர்களை வாக்கினாற் சொல்லி, மூக்கு முதலிய அவயவங்களைக் கைப் பெருவிரலினாற் றொட்டுக் கும்பிட்டு நாமக்கட்டி யென்னும் மண்ணுங்கட்டியை உரைத்துக் குழைத்துத் தென்னீர்க்கினால் கோணல் முதலிய குற்றங்களில்லாது நெற்றியிற் புருவரோமத்தடிகளினின்றும் மேல்ரோமவரையும் அரையங்குல அகலமுடைய பாதம்போலடி சிறுக்க நுனிபெறுக்க இரண்டுகீறிழுத்து, அதனடுவே * திருச்சூரணமென்னுஞ் சிவப்புத் தூளைச் சலத்திலே குழைத்து மூக்கு நுனி முதலாகச் சிரரோமம்வரையு மொரு கோடிழுத்துவிடுகின்றார்கள். இவ்வாறிழுக்கிறவர்களிற் சிலர் சூலம்போல நாமந்தரிப்பவராம்; சிலர் மர்மஸ்தலம்போன்ற நாமம் பூசுபவராம்; சிலர் ஒற்றைநாமமிடுபவராம்; சிலர் கோபிகை நாமம் போடுபவராம்; சிலர் தென்கலையாம்; சிலர் வடகலையாம். இப்படிப்பட்ட பேதங்களை யுடையவர்களாகி, ஒரே கடவுளைக்குறித்து வேறுவகைப்படாத மண்ணையுஞ் சூரணத்தையுந் தரிப்பவர்கள் வெவ்வேறுவிதமாய் நாமந்தரிப்பதை யுற்றுநோக்கின், விஷ்ணுவென்னும் பிரான் பதிவிரதா ஸ்திரீகளைக் கற்பழித்தலிலே மிகமுயற்சியுடையவனென்பதனைப் புராணங்கள் தெள்ளிதில் விளக்குதலினாலே விஷ்ணுவினிடத்துப் பிரீதியுள்ளார் மர்மஸ்தலநாமத்தையும் விஷ்ணு மோகினியுருவெடுத்து சிவனோடு வாழ்ந்திருத்தலினாலே சிவவிஷ்ணுக்களிடத்துப் பிரீதியுள்ளார் சூல நாமத்தையும் விஷ்ணுவை ஸ்ரீயாகவுடைய சிவனிடத்துப் பிரீதியுள்ளார் ஒற்றை நாமத்தையும் விஷ்ணுவின் பெண்டுகளாகிய கோபிகா ஸ்திரீகளிடத்துப் பிரீதியுள்ளார் அவர்களதுபோன்ற கோபிகா நாமத்தையுந் தரிக்கின்றார்களென்றே கூறவேண்டும். இங்ஙனமுள்ளதை யுள்ளபடி தெளிவாய்க்காட்டியுந்தெளியார்க்குச் சிதம்பரத்திலே சிவன்நடனஞ்செய்யும்பொழுது விஷ்ணுபார்த்துச் சிரித்தநிமித்தந்துவேஷங்கொண்ட சிவன் விஷ்ணுவினது நெற்றியிலுதைக்க, அவ்வுதையினாலறிவுமயங்கியிப்பொழுதுங்கிடக்கின்றானென்றும், அவ்விஷ்ணுவினது நெற்றியிற்பட்டசிவனது பாதங்களையேவெண்மண்ணினாலிடப்பட்டஅடையாளங்களாகவும், அப்பாதங்களின் மிதிப்பினால் நெற்றியில் பீறுண்டரத்தம் சிவப்புச்சூரணத்தினா லிடப்பட்ட அடையாளமாகவும், மிதியுண்ட அடையாளங்களை மறைத்து விஷ்ணுவுக்கு நாமஞ் சாற்றுவதுமன்றித் தாங்களுந் தரிக்கின்றார்களென்றும், முன்னோர் காலத்து ராமனானவன் சீதையைச் சிரமேல்தூக்கிக் காட்டுவழிச்சென்றபொழுது, அவளது மர்மஸ்தானத்தினின்றும நெற்றிவழியாக வழிந்த இரத்தவடையாளத்தையே நாமமாகத்தரிக்கின்றார்களென்று சகலருக்கும் விளங்கும்படி சைவர்கள் காட்டவும், சிங்கப்பூர் பினாங்கு முதலான வூர்களில் தங்களபிப்பிராய வடையாளங்களைத்தரித்தடிமைகளை விற்றுச் சீவனஞ் செய்யும் வியாபரிகளைப்போல் விஷ்ணு வென்னும் பெயருடையோன் தனதபிப்பிராய நாமங்களைப் பேதைச் சனங்களுக்கிட்டு அடிமைகளாக்கி வியாபாரஞ் செய்திருக்கவேண்டுமென்றும், அக்காலத்தில் விஷ்ணு புத்தியுள்ளவனானதினால் பேதமைச் சனங்களுக்குத் தன்னையே கடவுளென்று போதித்து நாமம் என்னும் விபரீதவடையாளங்களைத் தரிக்கும்படி செய்தானென்றும் பிரமக்கியானிகள் பலசமையத்தவர்க்கு விளங்கும்படி சாற்றவும், இன்னோரன்னவாபாசங்களைப் பலசமயத்தவர் கூட்டிச்சுமிக்கவும், இக்கும்பல்களுக்குள் அணையாது சுவக்கியானிகளின் ஞானக்கினி சுவாலித்தெரித்து உள்ளதை யுள்ளபடி காட்டவுமாயிற்று. அங்ஙனம் உள்ளதை யுள்ளபடி விளங்கக் காட்டும் சுவக்கியானிகள் கூற்றை யங்கீகரியாது அசங்கிதமாகிய மண்ணையுந் தூளையுங் குழைத்துத் தரித்தலினாலென்ன பலனை அடைவீர்களோ சுவக்கியானிகளாகவேண்டியவர்களே சிந்தியுங்கள் சிந்தியுங்கள்.

இங்ஙனம், சுவஞானகுரு
பரித்தித்துறை, யாழ்ப்பாணம்.

## ஹிந்துஉடுப்பு விரோதக்கூட்டம்.

இம்மகுடஞ்சூட்டி, இலலிதா பிரஸந்நோதய பத்திரிகையில் எழுதியிருப்பதாவது.—"இவ்வகைக் கூட்டங் கூடுவது ஐரோப்பியர்களுக்கு வழக்கம். இம்மாதிரி ஹிந்துக்கள் கூடியதில்லை. இம்முதற்கூட்டமானது செவ்வையாய் நிறைவேறியதாகவே அறிந்து சந்தோஷிக்கிறோம். சென்ற 9உ இக்கூட்டம் சேதுகோகுலதாஸ் என்பவர் பங்களாவிலே கூடியதாம். ஷ தேதி புதன்கிழமை ஹோலிபண்டிகை முக்கியதினமாகையால், அன்று வழக்கம்போல ஒருவர்மேல் ஒருவர் சிவப்புச் சாயநீரை ஊற்றிக்கொள்வதும் ஒருவர்க்கொருவர் தெருக்களில் அசங்கியமான வார்த்தையாடிக்கொள்வதும் அநாகரிகமென்று தேர்ந்த பணமும் கல்வியும் மிகுந்த சிலசிறுவர் பழையதுர்வழக்கத்தைப் பகைத்து விதம்விதமான விநோத உடுப்புகள் தரித்துக்கொண்டு வேடிக்கை காட்டினார்கள். இவ்வாறே

* வெண் மண் பூமியின் வேற்றுமைகளினால ஆறு அல்லது குளமுதலியவைகளில் விளையும்.

* மஞ்சளைத் தொலிபோக்கி எலுமிச்சம்பழ ரசத்திலே யூரவைத்து உப்பச்செய்து சூரியகிரணத்திலே யுலரவைத்து அம்மஞ்சளோடு பொரிகாரமும் பச்சரிசியுஞ் சேர்த்து இடித்துத்தூளாக்குவதே திருச்சூரணமெனப்படும்.

கல்விமான்கள் அநாகரிகமான பழைய வழக்கங்களையெல்லாம் வேரறுத்து வரவேண்டும்." [இதை, 'தொன்மைமறவேல' என ஔவையார் கூறிய வாக்கியத்திலே, தொன்மை என்பது பழமையெனப் பொதுப்படவிருந்தபோதிலும், 'பழமை' என்னும் அதிகாரத்தில் நட்பைப்பற்றியும். 'பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல், சுற்றத்தார்கண்ணேயுள', என்று சுற்றத்தாரைப் பற்றியும் நாயனார் கூறியபடித் தொன்மையென்பதற்குப் பொருள் செய்யவேண்டியதைவிட்டு, முன்னோர்கள் செய்துவந்த பழமையான காரியங்களிலெதையுங் கைசோரவிடாது அனுசரித்து வரவேண்டுமென்று வீண் வார்த்தைகள் பேசும் வீணாவீணர்கள் கவனிக்கவேண்டும்.]

—o—

## வர்த்தமானசங்கிரகம்.

இரண்டு மாசத்திற்கு முன்னமே நாய்க் கடியுண்ட ஒரு சிறுவன் குணமடைந்தவனைப்போலிருந்து, சடுதியில் சென்ற சனிவாரம் போசனம் ஏற்றுக்கொள்ளாமல், மறுநாள் காலமே கொஞ்சம் சுரங்கண்டது. அவனைப் பெற்றோர் பேதிக்குக் கொடுத்தார்கள். ஆயினும், அச்சிறுவன் தொண்டை ரணமாயிருக்கிறதென்றும், தண்ணீர் குடித்தால் அடைத்துக்கொள்ளுகிறதுபோலிருக்கிற தென்றும் முறையிட்டான். அதன்மேல் அவனை டாக்டரிடத்திற்கு கொண்டுபோனார்கள். அவர் பரிசோதித்துப் பார்த்துத் தொண்டையில் ஒன்றுமில்லையென்று தெரிந்துகொண்டு கொஞ்சம் தண்ணீர்குடிக்கச்சொன்னார். அவன் குடிக்கமாட்டேனென்றான். உடனே அவனிடத்து நாய்க்கடிக் குறிகள் காணப்பட்டன. அன்று ராத்திரி அக்குறிகள் அதிகப்பட்டு, திங்கட்கிழமை காலமே யிறந்துபோனான்.—நாய்கடித்தால் அசட்டைசெய்யாமல உடனே விஷம்போகும்படியான தகுந்த சிகிச்சை செய்யவேண்டுமென்பதை ஞாபகமூட்ட முக்கியமாயிது தெரிவிக்கப்பட்டது.

பதினைந்துவயதுள்ள ஒரு பெண் தன் கணவனோடும் மாமியாரோடும் வாழ்ந்துகொண்டிருக்கையில், சென்ற திங்கட்கிழமை ராத்திரி வயிறுநோகிறதென்று முறையிட்டாள். மாமியார் சில பரிகாரஞ்செய்து அவளைப் படுக்கவைத்துப்போனாள். மறுநாள் காலமே கிழவி எழுந்து வீடு பெருக்குகையில், ஒரு கிண்ணத்திலே அபினிமருந்து கலக்கிக் குமரியின் படுக்கையின் கீழ் வைத்திருந்ததைக் கண்டு அனுமானித்து, அந்தப் பெண்ணைப் பார்க்கையில் புத்தி மாறாட்டமாயிருக்கக் கண்டு உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகையில் வழியி லிறந்துபோனாள்.—இக்காலத்தில் கல்விப் பயிற்சி முதலிய நாகரீகத்தால் நாத்தி ஓரகத்தி மாமிமார்களுடைய உபத்திரவமும் போராட்டமும் வெகுவாய் ஒழிந்திருந்தபோதிலும், சில விடங்களிலே இன்னும் நடமாட்டமுறுதலால், கெடுதிக் கிடமுண்டாயிருக்கிறது; அதுவும் ஒழியவேண்டும்.

ஏசுநாதர் மரித்த புதுவெள்ளிக்கிழமை பண்டிகை நாள்களாகிய வருகிற ஏப்ரல மீ 4 உ திங்கட்கிழமை முதல 12உ செவ்வாய்க்கிழமைவரையில் (அவ்விரண்டுநாள்களுமுளபட) ஒரேகட்டணத்திற்கு பஸ்டுகிளாஸ் செகன்கிளாஸ் ரிட்டரன் டிக்கெட்டுகள் கொடுக்கப்படுமாம் 20 உக்குள்ளாக எந்ததினத்திலாவது திரும்பிவரக்கூடும; அதற்குமேற்பட்டு அந்தட்டிக்கெட்டுகள் செல்லாது. எந்தஸ்டேஷனிலிருந்து எந்தஸ்டேஷனுக்குப் போகிறதாகடிக்கெட்டில் கண்டிருக்கிறதோ அந்தப்படியேதான் போகவேண்டும். ஒவ்வொருமார்க்கத்திற்கும் அந்த டிக்கெட்டை ஒரேதடவைதான் உபயோகிக்கவேண்டியது; வேறொருவருக்கு கொடுக்கக்கூடாது.

ஜபான் தேசத்திலே யோகோஹாமாவில் சென்ற ஜனவரிமாசத்திலே பூகம்பமுண்டாயதாம், 1880௵த்தில்நேரிட்டதைவிட இது மிகவும்கொடியதாயிருந்தது; பின்னுஞ் சற்றுநேரமில்லாமற்போனது அதிர்ஷ்டவசமே, இன்னும் ஐந்து செகண்டுமாத்திரமிருந்திருக்குமாகில், தோகியோ-யோகோஹாமா இந்த இரண்டு பட்டணமும் தரைமட்டமாய்விடுமென்று அவ்விடத்தியநட்சத்திர கணிதசாலை புரொபெஸ்ஸர் மில்னெஸ் என்பவர் சொல்லுகிறார். [இதுவுங் கடவுளுடைய சித்தந்தான்! யோசித்துப் பார்க்கவேண்டும்.]

லோயர்பர்மாவிலே 4,600,000 ஏகராசாகுபடி நிலங்களில, 3,700,000ஏகராநெல்சாகுபடியாம்.1886ம் வருஷத்திலே பர்மாவிலிருந்து இந்தத்தானியம் ஏற்றுமதியானது 10,27,000டன்.—பர்மாவிற்குஜவுளியையும் இரும்புசாமானகளையும் வரவழைக்கிறவர்கள் அனேகவருஷமாய்த் தாங்க ளறியாத அவ்வளவு சீராய் வியாபாரம் சிலமாசங்களாய் நடந்துவருகிறதென்று சொல்லுகிறார்கள். சகல சரக்குகளும் பரபரப்பாய் விற்பனையாவதால் கையிருப்புச் சரக்கு செலவாய் விடுவதுபற்றி, கொள்வன செய்வதற்காக வியாபாரிகளுக்கு அதிகபணம் வேண்டியிருக்கிறது.

ஒரு ஆங்கிலேய ரசாயன சாஸ்திரியானவர் கடற்பூண்டிலிருந்து விளாம்பிசினைப்பார்க்கினும் அதிக பந்தனையாயும் பலவிதமான விடுதி வஸ்துக்களைக் கெட்டிப்படுத்துவதற்கு மிகவும் அனுகூலமானதாயுமிருக்கிற ஓர் பசைசத்து கண்டுபிடித்திருக்கிறார். அது சிரப் செய்வதற்கும் சில சமயல் வேலைகளுக்கும் வெகு உபயோகமானதாயிருக்குமாம். ரசமெடுத்துக்கொண்டு சுழித்துவிடப்பட்ட திப்பிக் கோதினால எழுதுவதற்கு மிகவும் நாணயமான கடுதாசி நயமாய்ச் செய்யக்கூடும். (விவேகத்தை வீணான மனோராச்சியத்தில் செலுத்தாமல், லவுகிகவிஷயத்தில் செலுத்தினால் சுகம்பெறலாம்.)

ரிஜிஸ்தர் செய்யப்படாத கடிதங்களையும், போஸ்டுகார்டுகளையும், சிப்பங்களையும், காலாதீதமாய்க் கொண்டுவந்து ரெயில்வேஸ்டேஷன் தபாலில்போட்டால், அதற்காக வாங்கிவந்த இரண்டணாகட்டணம் ஒரு அணாவாகக்குறைக்கப்பட்டது.

குண்டகல்லிலிருந்து நந்தியாலுக்குப் போடப்பட்ட பல்லாரி கிருஷ்ணா ரெயில்வேமார்க்கமானது இப்போது வேலை முடிந்து வியாபாரத்திற்குச் சித்தமாயிருக்கிறது. வருகிற ஏப்ரில் மீ கஉ வண்டித்தொடர் விடப்படும்.

சென்னை மரணரிஜிஸ்தர்—நாளது மீ 12உ முதல் 18உ வரையில். ஒரு யூரோப்பியனும், ஆறு ஈஸ்டிண்டியர்களும், பதினொரு சுதேச கிறிஸ்தவர்களும், 216 இந்துக்களும், 42 மகமதியர்களும், ஆக-276 பேர் இறந்துபோனார்கள். சென்ற பத்துவருஷத்திற்கு அதே வாரத்திலே சராசரியில் மரணம்326 ஆகிறது. மேற்படி 276 பேரில், சின்னம்மையினால் 3, சுரத்தினால் 79, சீதபேதியினால்23, அதிசாரத்தினால் 26, வாந்திபேதியினால் 3- மற்றவியாதிகளினால் 142.

## அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிசமாக "தீன்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச

தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணை புரிவார்களென்று நம்புகிறோம.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS. No. 174, Davaraja Moodelly Street,—Madras.